# அக்டோபரில் ஜிஎஸ்டி வசூல் ரூ.1.72 லட்சம் கோடி

**புது தில்லி, நவ. 1:** சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அக்டோபர் மாதத்தில் ரூ.1.72 லட்சம் கோடி அளவுக்கு வசூலாகியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் புதன்கிழமை தெரிவித்தது.




கடந்த ஆண்டு அக்டோபரில் ரூ. 1.52 லட்சம் கோடி வசூலான நிலையில், நிகழாண்டில் அதே மாதத்தில் 13 சதவீதம் கூடுதலாக வசூலாகியுள்ளது.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஜிஎஸ்டி அக்டோபரில் ரூ.1.72 லட்சம் கோடி அளவுக்கு வசூலாகியுள்ளது. இது இரண்டாவது மிக அதிக வசூலாகும். கடந்த ஏப்ரலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ரூ.1.87 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. அதற்கு அடுத்தபடியாக தற்போது வசூலாகியுள்ளது.

2023-24 நிதியாண்டில் சராசரி ஜிஎஸ்டி வசூல் ரூ. 1.66 லட்சம் கோடியாக உள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 11 சதவீதம் கூடுதலாகும் என்று தெரிவித்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு: சிறப்பு மலர்களை வெளியிட்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்




சென்னை தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு மலர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட அவற்றைப் பெற்றுக்கொண்ட மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி. உடன், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமை செயலர் சிவ் தாஸ் மீனா உள்ளிட்டோர்.

**சென்னை,நவ.1:** விடுதலைப்போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு குறித்த சிறப்பு மலர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அவற்றை மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக்கொண்டார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சுதந்திர தினத்தன்று தலைமைச் செயலக கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில், இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்து முழுமையான ஆவணம் ஒன்று தயாரிக்கப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாகவும், தமிழ்நாட்டின் தியாகிகளைப் போற்றி பெருமைப்படுத்தும் வகையிலும் ஆவணத்தைத் தயார் செய்ய லயோலா கல்லூரி முன்னாள் தலைவர் பெர்னாட் டி சாமி தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் வரலாற்றுப் பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, பாடநூல் கழக இணை இயக்குநர் சங்கர சரவணன், எழுத்தாளர் த.ஸ்டாலின் குணசேகரன் உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

சிறப்பு மலர்களில் தமிழ்நாட்டில் சுதந்திரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாறு, இந்திய தேசியவாதமும் சங்கத் தமிழ் இலக்கியமும் எனப் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு மலர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட, மேற்குவங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை செயலர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# புதியதோர் தேர்தல் படைப்போம்!



கோ. விசுவநாதன்

**வாக்குக்கு பணம் ஏன் என்ற கேள்வியை நான் திரும்பத் திரும்ப எனக்குள் கேட்டுக் கொண்டேன். நாடாளுமன்றத் தேர்தல், சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் நகரமன்றத் தேர்தல் என்று ஏழு முறை போட்டியிட்டேன். ஆனால், எந்தத் தேர்தலிலும் வாக்களிக்க பணம் தந்து நான் வெற்றி பெறவில்லை.**

கட்டுரையாளர்:
**வேந்தர்,**
**விஐடி பல்கலைக்கழகம், வேலூர்.**

# மனமிருந்தால் மார்க்கமுண்டு!

இந்தியாவின் நிர்வாகத் தலைநகரமான தில்லியும் சரி, வர்த்தகத் தலைநகரமான மும்பையும் சரி மிகவும் மோசமான காற்று மாசுப் பிரச்னையால் மூச்சுத் திணறுகின்றன. அவை மட்டுமல்ல, இந்தியாவின் பல நகரங்களும் இந்தப் பிரச்னைக்கு விதிவிலக்கல்ல. சமீபத்தில் மும்பை, புணே, சென்னை, அகமதாபாத் நகரங்களின் காற்றுத் தரம், தலைநகர் தில்லியைவிட மோசமாக இருந்ததாகப் பதிவாகி இருக்கிறது.

தரம் குறைந்த காற்று காரணமாக, இந்தியாவின் பல நகரங்களில் புகை மண்டலம் போல மாசு படிந்த நிலைமை ஏற்பட்டது. உலகில் மிக மோசமான காற்றுத் தரமற்ற 15 நகரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆக்ரா, லக்னௌ, வாரணாசி, பாட்னா, ஜெய்ப்பூர், ஜோத்பூர், ஸ்ரீநகர், ஃபரீதாபாத், கான்பூர் நகரங்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறுகின்றன.

இந்தியாவைப் போலவே, உலகின் பல நகரங்கள் இந்தப் பிரச்னையை எதிர்கொள்கின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வறிக்கை, உலக மக்கள்தொகையில் 90% பேர் மாசு நிறைந்த காற்றைத்தான் சுவாசிக்கிறார்கள் என்கிறது. 2019 அறிக்கையின்படி, காற்று மாசால் ஏற்படும் பாதிப்பால், 45 லட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

வழக்கத்துக்கு முன்பாகவே நுரையீரல் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரை அளவில் தலைநகர் தில்லியின் காற்றுத் தரம் இல்லாமல் போனால், அங்கே வாழ்பவர்களின் ஆயுள்காலம் 11.9 ஆண்டுகள் குறையக்கூடும் என்கிறது சிகாகோ பல்கலைக்கழகத்தின் ஆய்வு.

காற்றின் தரம் குறைவதற்கும், காற்று மாசு அதிகரிப்பதற்கும் சில பொதுவான காரணிகள் கூறப்படுகின்றன. அதிகரித்துவரும் டீசல் வாகனங்கள், கட்டுமானப் பணிகள், அனல் மின்நிலையங்கள், புகை கக்கும் தொழிற்சாலைகள் போன்றவை பொதுவான காரணிகள். குப்பையை எரிப்பதும், பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிப்பதும்கூட காற்றின் தரத்தை பாதிக்கின்றன. தில்லியைப் பொருத்தவரை, அண்டை மாநிலங்களான பஞ்சாப், ஹரியாணாவில் அறுவடை முடிந்த பிறகு வைக்கோலுக்குத் தீ மூட்டுவது, மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

காற்று மாசு உருவாக்கம் என்பது, ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு விதத்தில் உருவாகிறது. கோடை காலத்தில் தூசின் அளவு 31% முதல் 34% என்றால், அதுவே குளிர் வந்துவிட்டால் 6% முதல் 15% என்கிற அளவில் குறைந்துவிடும். வாகனங்கள், தொழிற்சாலைகள், குப்பை எரித்தல் ஆகியவற்றால் உருவாகும் புகையால் ஏற்படும் மாசு, குளிர்காலத்தில் 85% முதல் 94% வரை அதிகரிக்கிறது. அண்டை மாநிலங்களில் வைக்கோல் எரிப்பது என்பது வருடத்தில் ஒருமுறைதான் நடைபெறுகிறது.

அதனால், அவ்வப்போது சூழலுக்கு ஏற்ப, காற்றின் தரத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் வகுக்கப்படுவதன் மூலம்தான் இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள முடியும். குளிர்காலத்தில்தான் காற்றின் தரம் மிகவும் குறைந்து காணப்படுகிறது என்பதால், அதை எதிர்கொள்வதற்கு மாநகராட்சி தயாராக இருப்பதுதான் இதற்குத் தீர்வு.

சாலையில் காணப்படும் தூசின் அளவைக் கட்டுப்படுத்துவதும், மோட்டார் வாகனங்களின் புகையை மட்டுப்படுத்துவதும் சுலபமாக முன்னெடுக்க முடிகின்ற நடவடிக்கைகள். சாலையோர மரங்களும், தொடர்ந்து சாலைகளில் தண்ணீர் தெளிப்பதும் மணல் தூசைக் கட்டுப்படுத்தும். பெட்ரோல், டீசல் வாகனங்களுக்குத் தடைவிதித்து எல்.பி.ஜி., மின்சார வாகனங்களை மட்டுமே அனுமதிப்பது என்று மாநகராட்சி நிர்வாகம் திட்டமிட்டால், வாகனப் புகைக்கு விடை கொடுத்துவிடலாம்.

1483 சதுர கி.மீ. விஸ்தீரணமுள்ள தலைநகர் தில்லியில் ஏற்கெனவே 400 கி.மீ. மெட்ரோ ரயில்பாதை செயல்படுகிறது. இது தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து சுற்றுப்புறப் பகுதிகளுக்கு, குறைந்த கட்டணத்தில் வசதியான சிற்றுந்துகள் அதிக அளவில் விடப்படுவதன் மூலம், தனியார் மோட்டார் வாகனங்களைக் கட்டுப்படுத்த முடியும். எரிவாயு, மின்சார வாகனங்கள் மட்டுமே இயங்கும் என்கிற நிலைமை ஏற்பட்டால், மெட்ரோ ரயில்களை நாடுபவர்கள் அதிகரிக்கவே செய்வார்கள்.

தில்லியைப் பொருத்தவரை, தெருவோரம் வசிப்பவர்கள் கடும் குளிரை எதிர்கொள்ள விறகை எரித்துக் குளிர் காய்கிறார்கள். குளிர்காலத்தில் காற்றின் தரம் குறைந்து காணப்படுவதற்கு, அது ஒரு முக்கியமான காரணம். தில்லி மட்டுமல்லாமல், பெரும்பாலான வட இந்திய நகரங்களிலும் இதே நிலை காணப்படுகிறது. தெருவோரம் வசிக்கும் ஏழை எளிய மக்கள் தங்குவதற்கு, பாதுகாப்பான இரவு நேரத் தங்குமிடங்கள் ஆங்காங்கே அமைப்பதன் மூலம் விறகை எரிப்பதால் ஏற்படும் புகையைக் கட்டுப்படுத்த முடியும்.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை, லண்டன் மாநகரம் தற்போது இந்திய நகரங்கள் சந்திப்பது போன்ற பிரச்னையை எதிர்கொண்டது. 1952-இல் காற்றின் தரம் குறைந்து லண்டன் மாநகரத்தை புகைப்படலம் சூழ்ந்தது. அதன் விளைவாக லண்டன் மாநகரம் பல நாள்கள் தொடர்ந்து ஸ்தம்பித்தது மட்டுமல்ல, சுமார் 12,000 பேர் உயிரிழந்தனர். அடுத்த 20 ஆண்டுகள் தொடர்ந்து முன்னெடுத்த நடவடிக்கைகளால், இப்போது லண்டன் மாநகரக் காற்றின் தரம் கட்டுக்குள் இருக்கிறது.

குடிக்க சுத்தமான தண்ணீரும், சுவாசிக்கத் தரமான காற்றும் உண்ண உணவும், உடுக்க உடையும்போல அடிப்படைத் தேவைகள். அவற்றை உறுதிப்படுத்துவது அரசின் கடமை!

# லஞ்சம் கொடுத்தாலும் குற்றம்தான்

**இரா. சாந்தகுமார்**

நம் நாடெங்கிலும் அக்டோபர் 30 முதல் நவம்பர் 5 வரை 'கண்காணிப்பு விழிப்புணர்வு' வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. 'ஊழலை ஒழிப்போம், நாட்டைக் காப்போம்' ('ஸே நோ டு கரப்ஷன்; கமிட் டு தி நேஷன்') என்ற உறுதி மொழியை முன்வைத்து அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்படும் 'கண்காணிப்பு விழிப்புணர்வு' வாரத்தின் நோக்கம், ஊழல், லஞ்சம் ஆகியவற்றால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி அவற்றை நம் நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதே.

அரசுத் துறைகளில் அதிகபட்சமாக லஞ்சம் உள்ளவையாக வருவாய், பத்திரப் பதிவு, வட்டாரப் போக்குவரத்து, காவல் போன்ற துறைகள் உள்ளன.

லஞ்சம் தருவது தவறு என்றாலும், அதை கேட்போர் குறித்து எவரிடம் புகார் செய்வது என்ற மிகச் சாதாரண தகவல்கூடத் தெரியாத மக்கள் அதிக அளவில் இருப்பது கிராமப்புறங்களில்தான். எனவே, ஊழல், லஞ்சம் ஆகியவற்றை ஒழிப்பது குறித்து கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிக முக்கியம்.

சமூகத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை திரைப்படங்கள். எனவே, திரைப்படங்களில் மக்களின் மனதை மாசுபடுத்தும் காட்சிகளும், வசனங்களும் இடம்பெறக் கூடாதென்பதைக் கண்காணிக்கவும் அவ்வாறு இடம்பெறும் காட்சிகளையும் வசனங்களையும் தணிக்கை செய்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது திரைப்பட தணிக்கைக் குழு.

ஆனால், திரைப்பட தணிக்கைக் குழுவின் உறுப்பினர்களே லஞ்சம் பெற்றதாக பிரபல திரைப்பட நடிகர் புகார் கூறியது அதிர்ச்சி அளிக்கிறது.

சென்ற ஆண்டு வெளியான தமிழ்த் திரைப்படம் 'வெந்து தணிந்தது காடு'. இந்தத் திரைப்படத்தில் அரசு வேலைக்கு விண்ணப்பித்து, அதற்கான எதிர்பார்ப்புடன் இருக்கும் கதாநாயகனிடம், அஞ்சல் துறையின் பகுதி நேர பணியாளராக வருபவர், 'லஞ்சம் கொடுக்காமல் அரசு வேலை கிடைக்காது. இந்த பகுதி நேர பணியாளர் வேலைக்கு நான் ஒன்றரை லட்சம் லஞ்சம் கொடுத்தேன்' எனக் கூறுவார்.

மத்திய அரசின் துறைகளில் லஞ்ச, ஊழலற்ற அரிதான துறைகளில் ஒன்று இந்திய அஞ்சல் துறை. மேற்கூறிய திரைப்படத்தில், 'லஞ்சம் கொடுத்ததால்தான் அஞ்சல் துறையில் வேலை வாங்க முடிந்தது' என்ற வசனத்தையும், காட்சி அமைப்பையும் நம் இந்தியத் திரைப்பட தணிக்கை குழு அனுமதித்தது வியப்பை ஏற்படுத்துகிறது.

இந்திய அஞ்சல் துறைக்கு களங்கம் ஏற்படுத்தும் இந்தக் காட்சியையும், வசனத்தையும் எதிர்த்து அந்தத் துறையினர் எவ்வித எதிர்வினையும் ஆற்றாதது வேதனையளிக்கிறது.

தங்கள் அலுவலகங்களை நாடும் மக்களுக்கான சேவையை குறிப்பிட்ட நாள்களுக்குள் அரசுப் பணியாளர்கள் முடித்துத் தர வேண்டும் என்பதை அறிவிக்கும் 'குடிமக்கள் சாசனம்' அரசு அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். ஆனால், பெரும்பாலான அரசு அலுவலகங்களில் 'குடிமக்கள் சாசனம்', பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை.

நம் நாட்டின் 20 மாநிலங்களில் 'சேவை பெறும் உரிமைச் சட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நாள்களுக்குள் அளிக்கப்பட வேண்டிய சேவையை அந்த காலவரையறைக்குள் அளிக்காவிடில் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து அபராதத் தொகையை வசூலித்து விண்ணப்பதாரருக்கு கொடுக்க வகை செய்யும் இந்தச் சட்டம், தமிழகத்திலும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இதன் மூலம் மக்கள் தங்கள் சேவையை லஞ்சம் தராது விரைவாகப் பெற முடியும்.

லஞ்சம் வாங்குவது எவ்வாறு குற்றமோ, அதைப்போல் லஞ்சம் கொடுப்பதும் குற்றம். எனினும், லஞ்சம் வாங்கியதாக கைது செய்யப்பட்டவர்களைப் பற்றிய செய்திகள் வெளியாவதுபோல லஞ்சம் கொடுத்தவர்கள் கைதானதாக செய்திகள் ஏனோ வெளியாவதில்லை.

அரசின் பணத்தைச் செலவழிக்கும் பொறுப்பில் உள்ள உயர் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பேராசை, ஆடம்பர வாழ்க்கை ஆகியவற்றின் உந்துதலால் ஊழலில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படுவதை பார்த்த பின்னரும், ஊழலில் ஈடுபடும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அச்சப்படாது ஊழல் செய்வதுதான் வியப்பளிக்கிறது.

அரசு அலுவலகங்களில் லஞ்சத்தை ஒழிப்பதில் 'தகவல் அறியும் உரிமைச் சட்டம்' பெரும் பங்கு வகிக்கிறது. லஞ்சம் பெறும் உள்நோக்கத்தோடு மக்களுக்கு வழங்கும் சேவையை அரசுப் பணியாளர் ஒருவர் தாமதப்படுத்தினால், அதை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் அம்பலப்படுத்தி விடலாம். எனவே, இந்தச் சட்டம் பற்றிய அதிகபட்ச விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

உலகில் உள்ள 180 நாடுகளில் 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு நடத்திய ஆய்வின்படி, ஊழல் இல்லாத நாடுகளின் பட்டியலில் கடந்த ஆண்டு நிலவரப்படி 85-ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

நம் நாட்டு மக்களில் சுமார் 62 சதவீதம் பேர் பல்வேறு காரணங்களால் அரசு அலுவலகங்களில் தாமாகவோ, கட்டாயத்தின் பேரிலோ லஞ்சம் அளித்து தங்கள் வேலையை முடித்துக் கொள்கின்றனர்.

ஊழல் தடுப்புச் சட்டம் 1988-இன் கீழ் ஊழல், லஞ்சம் ஆகியவற்றில் ஈடுபடுவோருக்கு அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

ஊழல் ஒழிப்புச் சட்டம் இத்தனை கடுமையாக இருந்தும் லஞ்சம் - ஊழலற்ற நாடாக நம் நாடு உருவாகாமல் இருப்பதற்குக் காரணம் மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாமையே.

எனவே, ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் கண்காணிப்பு விழிப்புணர்வு வாரம் மக்களிடையே முழுமையான விழிப்புணர்வு ஏற்படும் வகையில் அனுசரிக்கப்பட்டு, அதன்மூலம் ஊழல் லஞ்சமற்ற நாடாக நம் நாடு உருவாக்கப்பட வேண்டும்.

**அக். 30 – நவ. 5 ஊழல் விழிப்புணர்வு கண்காணிப்பு வாரம்.**

# சாலை மேம்பாட்டுக்கான 'நம்ம சாலை' செயலி

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



'நம்ம சாலை' செயலியின் பயன்பாட்டை சென்னையில் புதன்கிழமை தொடங்கி வைத்த இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். உடன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, துறை செயலர் பிரதீப் யாதவ் உள்ளிட்டோர்.

**சென்னை, நவ. 1:** நாட்டிலேயே முதல்முறையாக சாலை உள்கட்டமைப்பு, பாதுகாப்பு மேம்பாட்டுக்கான 'நம்ம சாலை' என்ற செயலியை மாநில இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.

விபத்துகளில்லா மாநிலம் என்ற முதல்வர் மு.க.ஸ்டாலினின் தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் 'பள்ளங்களற்ற சாலை' என்ற இலக்கை அடைவதற்கு ஏதுவாக பொதுமக்களின் துணையோடு கண்டறியப்பட்ட சாலைப் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்படும் என்றும், திட்டத்தைச் செயல்படுத்த கைப்பேசி செயலி உருவாக்கப்படும் என்றும் சட்டப்பேரவையில் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், தற்போது ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் 'நம்ம சாலை' என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகளில் உள்ள பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் கைப்பேசி செயலி வாயிலாக புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்தால் உடனடியாக அதற்கு தீர்வு காணலாம்.

இந்த முன்னோடி திட்டத்தின் தொடக்க விழா, சென்னை கிண்டியில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 'நம்ம சாலை' செயலியை தொடங்கிவைத்தார்.

மேலும், நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களை பொதுமக்கள் எளிதில் தொடர்புகொள்ளும் வகையில் அனைவருக்கும் பிரத்யேக கைப்பேசி எண்களையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் சென்னை - கன்னியாகுமரி தொழில் வழித்தட திட்டத்தின் கீழ் ரூ. 622.19 கோடியில் மேம்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைகளை மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்து அமைச்சர் உதயநிதி பேசியது:

தமிழகத்தின் சாலைப் பாதுகாப்பு, உள்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக 'நம்ம சாலை' செயலி நாட்டிலேயே முதன்முறையாக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இதில், பொதுமக்கள் தகவல் தெரிவித்த 24 மணி நேரத்துக்குள்ளாக மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பள்ளங்களும், 72 மணி நேரத்துக்குள் மாவட்டத்தின் பிரதான, இதர சாலைகளில் உள்ள பள்ளங்களும் சரி செய்யப்படும்.

சாலைகள் சரி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் புகைப்படத்துடன் உடனே செயலியில் பதிவேற்றம் செய்யப்படும்.

பொதுமக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால்தான் அரசின் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், நெடுஞ்சாலைகள் - சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், கட்டுமானம், பராமரிப்புத் துறையின் தலைமைப் பொறியாளர் ரா.சந்திரசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.